தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-10-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தூய்மை இந்தியா விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், உழவியல் துறையின் கீழ் இயங்கிவரும் அகில இந்திய ஒருங்கிணைந்த பண்ணைத்திட்டத்தில் ‘‘தூய்மை இந்தியா’’ இயக்கம் அக்டோபர் 22-10-2016 முதல் 26-10-2016 வரை செயல்படுத்தப்பட்டது. இதனையொட்டி, பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சியின் முதல் பகுதியாக கிழக்குப் பண்ணையில் 22-10-2016 அன்று நடைபெற்ற தூய்மை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில், தொண்ணூற்று ஆறு முதலாம் ஆண்டு (இளங்கலை வேளாண்மை) நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வல மாணவர்கள் அவர்களின் ஒருங்கிணைப்பாளரான முனைவர் ந. சக்திவேல் உதவிபேராசிரியர் (உழவியல் துறை) அவர்களோடு பங்கு பெற்றனர். ‘‘தூய்மை இந்தியா’’ இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்து முனைவர் திருமதி கு. இரா. லதா அவர்கள் எடுத்துரைத்தார்.

இத்திட்டத்தின் செயல்பாடுகள், தூய்மையின் முக்கியத்துவம் பற்றி முனைவர் திரு.ப. தேவசேனாபதி, பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை அவர்கள் மாணவர்களுக்கு விளக்கினார். தூய்மை இந்தியா திட்டத்தின் முக்கிய அம்சங்கள் மற்றும் தேவை குறித்து முனைவர் வ.வாசுகி, முனைவர் க. சத்தியபாமா ஆகியோர் மாணவர்களுக்கு விளக்கி கூறினார்கள். மாணவர்கள், விஞ்ஞானிகள், கள பணியாளர்கள் தூய்மை குறித்து உறுதி மொழி ஏற்றனர். மேலும், தூய்மை இந்தியா திட்டத்தின் செயல்பகுதியாக மாணவர்களுடன் இணைந்து விஞ்ஞானிகளும் பிற பணியாளர்களும் கிழக்குப் பண்ணையில் உள்ள ஒருங்கிணைந்த பண்ணை திட்டத்தின் அங்கங்களான ஆட்டுக் கொட்டகை, மாட்டுத் தொழுவம், பழப்பயிர்த்தோட்டம், தீவனப்பயிர், ஆராய்ச்சித் திடல்கள் ஆகியவற்றை சுத்தம் செய்தனர்.

இந்த நிகழ்ச்சியின் அடுத்த பகுதியாக 25-10-2016 அன்று ''மலைவாழ் பழங்குடி விவசாயிகளுக்கான தூய்மை இந்தியா விழிப்புணர்வு முகாம்'' பெரியநாயக்கன் பாளையம் தாலுகாவில் உள்ள மலைவாழ் கிராமமான சேம்புக்கரை மற்றும் தூமனூர் கிராமங்களில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாற்பத்தி ஐந்து பயனாளிகள் தங்கள் குடும்ப உறுப்பினர்களோடு பங்கு பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் தூய்மை இந்தியா இயக்கத்தைப் பற்றியும், தூய்மை குறித்த விழிப்புணர்வு, திறந்த வெளி மலம் கழிப்பதின் மூலம் ஏற்படும் தீமைகள், அதனால் ஏற்படும் தொற்று நோய்கள் பற்றியும் முனைவர் ப. தேவசேனாபதி, பேராசிரியர் மற்றும் தலைவர் (உழவியல் துறை) அவர்கள் எடுத்துரைத்தார். முனைவர் சி. சின்னசாமி, பேராசிரியர் (உழவியல் துறை) தன் உரையில் விவசாயிகள் தங்களை எவ்வாறு சுத்தமாக வைத்திருப்பது தங்கள் விளைநிலங்களை களையின்றி சுத்தமாக வைத்திருப்பது, தன் வீடு, வீதி, கிராமம் ஆகியவற்றை சுத்தமாக வைத்திருக்கும் வழிமுறைகளை பற்றி விளக்கிக் கூறினார். மலை வாழ் மக்களுடன் விஞ்ஞானிகள் மற்றும் பிற பணியாளர்கள் சேர்ந்து தனிநபர் தூய்மையுடன் நம் சுற்றுப்புறங்களான வீதி, ஊர் அனைத்தையும் தூய்மையாக வைப்பதன் மூலம் நமது பாரத பிரதமரின் கனவான மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளான 2-10-2019-ல் தூய்மை பாரதத்தை அடைய அனைவரும் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர்.

அடுத்ததாக 26-10-2016 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உழவியல் துறை பேராசிரியர்கள், வேளாண் முதுகலை மாணவர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் பங்கு பெற்றனர். இந்நிகழ்ச்சியின் துவக்கமாக முனைவர் கு. இரா. லதா, பேராசிரியர் (உழவியல் துறை) அவர்கள் தூய்மை இயக்கத்தின் நோக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தனிநபர் சுத்தம் குறித்து எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் முனைவர் க. சத்தியபாமா உதவிபேராசிரியர் (மண்ணியல் துறை) அவர்கள், தூய்மை குறித்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியின் அங்கமாக அலுவலகத்தையும், ஆய்வகத்தையும் தூய்மை செய்ய மாணவர்களை முனைவர் வ. வாசுகி உதவிப் பேராசிரியர் (உழவியல் துறை) அவர்கள் வழிநடத்தினார்.

அதன் நிறைவுப் பகுதியாக 26-10-2016 அன்று ''தூய்மை இந்தியா'' பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பண்ணை தொழிலாளர்களிடையே நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அறுபது பண்ணைத் தொழிலாளர்கள் பங்கு பெற்றனர். மேலும், இந்நிகழ்ச்சியில் கிழக்குப் பண்ணை, மத்திய பண்ணை, நன்செய் பண்ணை மேலாளர்கள் கலந்துகொண்டனர்.

முனைவர் திரு. ப. தேவசேனாபதி, பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை அவர்கள் இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்து பண்ணைத் தொழிலாளர்களிடையே தனிநபர் சுத்தம்,

சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருத்தலின் பயன்கள், தூய்மையின்மையினால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றைக் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

“தூய்மை இந்தியா” இயக்கத்தின் நோக்கங்கள் மற்றும் தூய்மையின் சிறப்பு குறித்து முனைவர் நா. மரகதம் பேராசிரியர் மற்றும் தலைவர், பண்ணை மேலாண்மைத் துறை அவர்கள் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக பண்ணை தொழிலாளர்களுக்கு முனைவர் கே. சீனிவாசன் பேராசிரியர் (உழவியல் துறை), முனைவர் சு. பத்மாராணி உதவி பேராசிரியர் (பொருளியியல் துறை) மற்றும் முனைவர் க. சத்தியபாமா உதவிபேராசிரியர் (மண்ணியல் துறை) ஆகியோர் சுகாதாரம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தன் தூய்மையை உணர்த்தும் வகையில் வயலில் பண்ணைத் தொழிலாளர்களுக்கு பூச்சி மருந்து மற்றும் களைக் கொல்லிகள் உபயோகித்த பின் எவ்வாறு தங்களை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது. பண்ணை தொழிலாளர்களுடன் விஞ்ஞானிகள் இதர பணியாளர்கள் சேர்ந்து தூய்மை குறித்து உறுதிமொழி ஏற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்


TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY &
INDIAN COUNCIL OF AGRICULTURAL RESEARCH
ICAR
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
இந்தியவேளாண் ஆராய்ச்சி கழகம்
இணைந்து நடத்தும்
SWACHTA PAKHWADA
தூய்மை இந்தியா இயக்கம்
AICRP -IFS
அகில இந்திய ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்
உழவியல் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641003
நாள் : 26.10.2016
Department of Agronomy
Tamil Nadu Agricultural University
Coimbatore - 641003
Date 26.10.2016


TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY &
INDIAN COUNCIL OF AGRICULTURAL RESEARCH
SUB PLAN
SWACHTA PAKHWADA






TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY &
INDIAN COUNCIL OF AGRICULTURAL RESEARCH
SUB PLAN
25.10.2016